# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

## தரம் -10 மூன்றாம் தவணைப் பரீட்சை, 2017

| மனைப் பொருளியல்<br>Home Economics | 85 T I | மூன்று மணித்தியாலம்<br>Three hours |
|---|---|---|

**அறிவுறுத்தல் :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ii. 1தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை ( X ) இடுக.

iv. அவ் விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

The National e-learning Portal for The General Education

1) $[C_6 H_{10} O_5]n$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் கொண்ட காபோவைதரேற்றுக்கள் அடங்கும் கூட்டம்.

1) குளுக்கோசு, இனியுலின் 2) சுக்ரோஸ், மோல்டோஸ்
3) பெக்டின், செலுலோசு 4) சுக்ரோஸ், இனியுலின்

2) ஈரல், விலங்கு இழையம் ஆகியவற்றில் அடங்கியுள்ள காபோவைதரேற்று

1) கலற்றோஸ் 2) இலக்டோஸ் 3) பசைவகை 4) கிளைக்கோஜன்

3) 120 கிராம் காபோவைதரேற்றும் 60 கிராம் புரதமும் 18 கிராம் கொழுப்பும் உள்ள உணவை உட்கொள்ளும் போது பெறப்படும் சக்தியினளவு

1) 882 கிலோகலோரி 2) 872 கிலோகலோரி
3) 892 கிலோகலோரி 4) 862 கிலோகலோரி

4) குளுக்கோசு + கலக்றோஸ் சேர்வதால் உருவாவது.

1) சுக்குரோஸ் 2) மோல்ட்டோஸ் 3)இலக்ரோஸ் 4) புறக்ரோஸ்

5) சிறுவயதிலே பெருமளவு அவசியமான அமினோ அமிலமானது

1) திரியோனைன் 2) மெதியோனின் 3) ஆர்ஜினின் 4) ஐசோலியூசின்

6) எலும்புகளில் காணப்படும் புரதமானது

1) கேசின் 2) மயோசின் 3) ஜெலட்டின் 4) ஒரய்செனின்

7) அத்தியாவசிய கொழுப்பமிலமாக அமைவது
   1) ஒலேயிக்கமிலமும், அரக்கிடோனிக்கமிலமும்
   2) லினோலெயிக்கமிலமும், லினோலெனிக்கமிலமும்
   3) பாமிற்றிக்கமிலமும், லோரிக்கமிலமும்
   4) லினோலெனிக்கமிலமும், அரக்கிடோனிக்கமிலமும்

8) விற்றமின் $B_6$ இன் இரசாயனப் பெயர்
   1) ரைபோபிளேவின் 2) போலிக்கமிலம் 3) சயனோ கோபாலமின் 4) பிரிடொக்சின்

9) இன்சுலினின் கூறாகவும் நொதியங்களின் கூறாகவும் அமையும் கனியுப்பு
   1) செலனியம் 2) கந்தகம் 3) நாகம் 4) பொற்றாசியம்

10) பின்வருவன "Z" எனும் போசணைப் பதார்த்தத்தினால் ஆற்றப்படும் சில தொழிற்பாடுகள் ஆகும்.
   - என்பு, பல்விருத்தி
   - நொதியங்களின் தொழிற்பாடு
   - உடலின் அமிலகாரதன்மையைப் பேணல்.
   - காபோவைதரேற், கொழுப்பு, புரத அனுசேபத்திற்காக செயற்படல்.

   இங்கு Z எனப்படுவது.
   1) சோடியமாகும் 2) பொரஸ்பரஸ்சாகும்
   3) விற்றமின் E ஆகும். 4) பயோட்டீனாகும்

11) உணவுக் கூம்பகத்தில் எவ்வுணவை அதிகம் உள்ளெடுப்பதால் நீரிழிவு இதயநோய் ஏற்படும்.
   1) தானியமும், தானிய உற்பத்தியும் 2) எண்ணெயும், சீனியும்
   3) காய்கறிகளும், பழங்களும் 4) பாலும் பால் உற்பத்தியும்

12) பின்வருவனவற்றுள் கொழுத்த ஒருவருக்கு மிக உகந்த உணவு வேளையாகக் கருதப்படுவது
   1. சிவப்புப்பச்சையரிசிச்சோறு, வெண்டிக்காய்கறி, தேங்காய்ச்சம்பல், கருவாட்டுப் பொரியல், வல்லாரைக்கறி
   2. சிவப்புப்பச்சையரிசிச்சோறு, புடலங்காய்க்கறி, மீன்கறி, கெக்கரிச்சலாது, பொன்னாங்காணிச் சுண்டல்.
   3. சிவப்புப்பச்சையரிசிச்சோறு, மீன்புளித்தீயல், பருப்புக்கறி, கொகிலாசலாது, கத்தரிக்காய் மோஜீ
   4. சிவப்புப்பச்சையரிசிச்சோறு, நெத்தலிக்கறி, பலாக்காய்க்கறி, பாவற்காய் பொரியல், தக்காளி சலாது.

13) ஒட்சியேற்ற நிரோதியாக தொழிற்படும் விற்றமின்கள்
   1) விற்றமின் A, D 2) விற்றமின் E, C
   3) விற்றமின் A, C 4) விற்றமின் E, B

14) மரக்கறிகளில் பல்வகை தன்மையையும் அலங்காரத்தையும் பெற வெட்டும் முறையில் 3mm நீளம், 3mm அகலம், 3mm தடிப்பும் கொண்டு வெட்டும் முறையானது.
   1) புருணுஸ் 2) மஸதுவான் 3) ஜீலியின் 4) பெய்சுன்

The National e-Learning Portal for The General Education

15) பீற்றூட், கரட், முள்ளங்கி, பச்சை மிளகாய் ஆகிய காய்கறிகளில் காணப்படும் நிறப்பொருள் முறையே,

1. அந்தோசயனின், கரட்டீன், குளோரபில், பிளேவோன்
2. கரட்டீன், பிளேவோன், அந்தோசயனின், குளோரபில்
3. அந்தோசயனின், கரட்டீன், பிளேவோன், குளோரபில்
4. பிளேவோன், கரட்டீன், அந்தோசயனின், குளோரபில்

16) கம்சிகா என்ற மாணவி பின்வரும் அறிகுறிகளுடன் காணப்பட்டாள்.

- புண்கள் ஆறுவதில் தாமதம்
- கால்களில் நோ
- முரசில் பல் வேர்களில் இருந்து குருதி வடிதல்.
- உடலின் நிர்ப்பீடனத்தன்மை குறைதல்

ஆகவே அம் மாணவிக்கு ஏற்பட்ட நோய் நிலைமையானது

1) ரிக்கட்ஸ் 2) ஸ்கேவி 3) பெலகரா 4) குவாசியக்கோர்

17) நொதிய தொழிற்பாடு காரணமாக வெட்டி வைக்கப்பட்ட அப்பிள் துண்டு கபில நிறமாதலின் போது உண்டாகும் சேர்வை

1) பொலிபினோல் 2) பொலிபினோல் ஒக்சிடேஸ்
3) கீற்றோன் 4) பீனோல்

18) தானியங்களில் குறைவாகக் காணப்படும் அமினோ அமிலங்கள்

1) மெதியோனின் 2) லியூசின் 3) வலின் 4) லைசீன்

19) உலக சுகாதார தாபனத்தின் கூற்றுப்படி கட்டிளமைப் பருவம் எனப்படுவது.

1) 10-19 வயது 2) 10 -24 வயது
3) 10-18 வயது 4) 10 – 21 வயது

20) முதிர்ந்த விந்தை விதைக்கு அனுப்புதல்.

1) விதை 2) விதைப்பை 3) சுக்கிலக்கான் 4) ஆண்குறி

21) பெண் இனப்பெருக்கத் தொகுதியின் இரண்டு சூலகங்களுள் ஒரு சூலகத்தினூடாக முதிர்ச்சியடைந்த சூல் சாதாரணமாக விடுவிக்கப்படுவது.

1) ஐம்பத்தாறு நாட்களுக்கு ஒரு தடவை
2) இருபத்தெட்டு நாட்களுக்கு ஒரு தடவை
3) பதினான்கு நாட்களுக்கு ஒரு தடவை
4) இருபத்தாறு நாட்களுக்கு ஒரு தடவை.

22) பிணியாய் நிலையத்தில் தாய்க்கு வழங்கப்படும் போசணைப் பொருள்கள் அடங்கிய மாத்திரைகள்.

1) பெரஸ்சல்பேற்று, கல்சியம், விற்றமின் C
2) போலிக்கமிலம், கல்சியம், விற்றமின் A
3) பெரஸ்சல்பேற்று, நாகம், அயடீன்
4) போலிக்கமிலம், விற்றமின் C, பொஸ்பரஸ்

The National e-learning Portal for The General Education

31) தையல் முறைகளில் அடிப்படைத் தையலையும், தையல்நுட்ப முறைகளையும் கொண்ட தொகுதி

1) பெருநூலோடல், லேசிடெய்சித்தையல்
2) தட்டைப்பொருத்து, பிரான்சியப்பொருத்து
3) தோற்றாசோம், மேற்செறிப்பொருத்து.
4) தையல்காரசோம், விஸ்பத்தையல்.

32) கடிதத் தாங்கியின் உயரமும் அகலமும் முறையே

1) 36cm உயரம், 15cm அகலம்
2) 32cm உயரம், 15cm அகலம்
3) 30cm உயரம், 16cm அகலம்
4) 36cm உயரம், 16cm அகலம்

33) குவில்ட் செய்வதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படைத் தையல் முறை

1) பெருநூலோடல்
2) சிறுநூலோடல்
3) சோம் தையல்
4) விஸ்பம் தையல்

34) குழந்தை ஆடைகளுக்கு உகந்த துணிகள் அடங்கிய கூட்டம்.

1) மல்பீஸ், ஒலோன், நெனசுக், பண்டேஜ்
2) மல்பீஸ்,நென்சுக், வொயில், பண்டேஜ்
3) மல்பீஸ், பண்டேஜ், டெரலீன், வொயில்
4) மல்பீஸ், பண்டேஜ்,ஒலோன், டெரலீன்

35) துணையலங்காரங்களை ஆக்குவதற்கு பயன்படுத்தும் பொருள்கள் கொண்ட தொகுதி.

1) தீதாள், பென்சில், ரிபன், வெல்கோடேப்
2) வெல்கோடேப், தெறிகள், பொலிபில், உரிதாள்
3) உரிதாள், எம்ரோய்டரிசட்டம், தடித்தநூல், இரேந்தை
4) அளவுநாடா, அளவுமானி, தெறிகள், மணிகள்

36) சமூகத் தேவைகளை உள்ளடக்கிய கூட்டம் பின்வருவனவற்றுள்


1) ஒத்துழைப்பு, கருணை, உதவி செய்தல்
2) உதவி செய்தல், பாதுகாப்பு, தொடர்பாடல்
3) கருணை, ஒத்துழைப்பு, அன்பு
4) போக்குவரத்து, உதவி செய்தல், தொடர்பாடல்

37) பகிர்வு, தியாகம், பிறர்நலம், பொறுமை அடங்கிய பண்புகளைக் கொண்ட குடும்ப அமைப்பு

1) பிரதான குடும்பம்
2) உப குடும்பம்
3) ஒன்றிணைந்த குடும்பம்
4) அடிப்படைக் குடும்பம்

38) பௌதீக வளங்கள் அடங்கிய கூட்டம்

1) காலம், மின்சாரம்
2) எரிபொருள், இடவசதி
3) பொது வசதிகள், திறன்
4) காலம், பணம்

39)  இக் குறியீடு குறிப்பது

1) யன்னல்
2) கதவு
3) காற்றிடைவெளி
4) சுவர்

40) பின்வருவனவற்றில் பல் தொழிற்பாட்டுத் தளபாடங்களைக் கொண்ட தொகுதி

1) இலாச்சிகளுடனான கட்டில், மேசையுடன் கூடிய அலுமாரி
2) மடிக்கும்கட்டில், வரவேற்பறையில் உள்ள மெத்தையிருக்கை.
3) மடிக்கும்உடுப்புஇறாக்கை, மடிக்கும்கட்டில்
4) அடுக்குக்கட்டில், இலாச்சிகளுடனானகட்டில்

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

## தரம் -10 மூன்றாம் தவணைப் பரீட்சை, 2017

| | | |
|---|---|---|
| மனைப் பொருளியல்<br>*Home Economics* | 85 T II | மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

**முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1) **பின்வரும் நிகழ்வைக் கற்று தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

மாலதியும் அவரது கணவர் சந்தோசும் அவர்களின் 15 வயது பெண் பிள்ளையும் 5 வயது ஆண் பிள்ளையும் மாலதியின் பெற்றோரும் ஒன்றாக வசித்து வருகின்றனர். மாலதி தனது குடும்பத்தினருக்கு போசாக்கான உணவுகளை வழங்குவதில் விசேட கவனம் செலுத்துவாள். இவளது கணவர் தொழிலில் ஈடுபட்டிருப்பதுடன் இவள் தையலில் விசேட திறன் மிக்கவள். ஆகையினால் ஓய்வு நேரத்தில் தையலில் ஈடுபட்டு வருகின்றாள். அத்துடன் தமது மகளின் ஐந்தாவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாக கொண்டாடுவதற்கும் ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

i. மேற்கூறப்பட்ட **குடும்பம்** எக்குடும்ப **வகையினுள்** அடங்கும்?

ii. இவர்களுக்கான உணவு வேளைகளை மாலதி திட்டமிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் **இரண்டைக்** குறிப்பிடுக.

iii. இவ்வுணவு வேளையைத் திட்டமிட வழிகாட்டியாக இருக்கும் மூலாதாரங்கள் **இரண்டு** தருக.

iv. கட்டிளமைப் பருவ பெண் பிள்ளைகளுக்கான **மதியநேர** உணவுப் பட்டியலைத் திட்டமிடுக.

v. கல்சியக் குறைபாடு காரணமாக வயோதிபப் பருவத்தில் ஏற்படும் **நோய்** எவ்வாறு அழைக்கப்படும்?

**vi.** இவர்களின் மகளின் பிறந்ததின விழாவில் **சுயபரிமாறல்** முறையில் (Self Service) உணவு பரிமாறப்படவுள்ளது. **சுயபரிமாறல்** என்பதை அறிமுகஞ் செய்க.

vii. உணவை உண்ணும் போது பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்கள் **இரண்டு** தருக.

viii. இல்லத் துணையணிகளை நிர்மாணிக்கும் போது அதன் அலங்காரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக அவற்றின் நேர்விளிம்பு வளைந்த விளிம்பு என்பவற்றைச் சீர்செய்வதற்கு பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள் **இரண்டு** தருக.

ix. கைத்துடைப்பத் தாங்கியொன்றில் ஆகக்குறைந்தது **எத்தனை** அலங்காரத் தையல் இருக்க வேண்டும்? அவற்றைக் குறிப்பிடுக.

x. கட்டிளமைப் பருவப் பிள்ளையின் உள விருத்தியின் போது வெளிக்காட்டப்படும் இயல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

**[10x2=20புள்ளி]**

2)

i. குழந்தை ஆடையொன்றில் இருக்க வேண்டிய **விசேட** இயல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

ii. ஆடை நிர்மாணத்தின் போது மாதிரியுரு ஒன்றை உபயோகிப்பதன் **நன்மைகள் மூன்றைக்** குறிப்பிடுக.

iii. குழந்தை ஆடையின் (Baby Shirt) கழுத்து, கைக்குழைச்சடி, கீழ் விளிம்பு ஆகியவற்றை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தும் **மூன்று** தையல் முறையைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை வரிப்பட உதவியுடன் விளக்குக.

3)

i. புரதத்தின் மூலம் உடலில் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் **மூன்றைக்** குறிப்பிடுக?

ii. நிறைபுரதம், நிறைவில் புரதம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் **மூன்றை எடுத்துக் காட்டுக.**

iii. பப்பேஸ்ரி தயாரிக்கும் முறையை ஒழுங்கு முறையில் விபரிக்குக.

**[3+3 +4 = 10 புள்ளி]**

4)

i. உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக.

ii. a) உணவில் அடங்கியுள்ள அகக் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

b) பாலில் வளரும் பக்ரீரியாக்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

iii. உணவை நற்காப்புச் செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

**[3+3 +4 = 10 புள்ளி]**

5)

i. உணவை ஆயத்தப்படுத்தும் போது பின்பற்றப்படும் உரிய **நுட்பமுறைகளைக்** குறிப்பிடுக.

ii. உலர் வெப்பத்தில் சமையல் செய்யும் முறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. அவற்றுள் **ஒரு** முறையினை உதாரணத்துடன் விளக்குக.

iii. உணவை சமைப்பதன் முக்கியத்துவம் **நான்கைக்** குறிப்பிடுக.

**[3+3 +4 = 10 புள்ளி]**

6)

i. **"மேற்காவுகை ஓட்டம்"** என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

ii. மனையை அமைப்பதற்கு திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக.

iii. இயற்கையான ஒளியும், காற்றோட்டமும், மனையினுள் கிடைப்பதால் ஏற்படும் நன்மைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

**[3+3 +4 = 10 புள்ளி]**

7)

i. கர்ப்பிணித் தாய்க்கு பிணியாய் நிலையத்தின் மூலம் ஆற்றப்படும் செயற்பாடுகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

ii. கர்ப்பிணித்தாய் எவ்வாறான போசனைகளை உள்ளெடுக்க வேண்டும். அதற்கான **காரணங்களையும்** குறிப்பிடுக.

iii. பெண் இனப்பெருக்கத் **தொகுதியை** வரைந்து அதன் **பகுதிகளையும்** குறிப்பிடுக.